**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 539/2025**

**Prosecution witness : அ.சா.5** **Date : 05.03.2026.**

| | |
|---|---|
| **Name : மோகன்குமார்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused 1,3 present. ) (Accused 2 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் புலன் ஆய்வு செய்த புலனாய்வு அதிகாரி திரு.ஆனந்த்ராஜ், காவல் ஆய்வாளர் தக்க சமயத்தில் சாட்சியம் அளிக்க இயலாத காரணத்தால் அவர் சார்பாக ஆவணத்தின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 01.07.2023–ம் தேதி ஜலகண்டாபுரம் காவல்நிலையத்தில் காவல் உதவி சிறப்பு உதவி ஆய்வாளர் அழகுமுத்து நிலையப் பொறுப்பில் இருந்த போது, சேலம் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு முதல் நிலை காவலர் தங்கராஜ் என்பவரை அனுப்பி அவர் அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த துரைசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.146/2023 u/Sec. 294(பி), 323, 324, 506(1) IPC** ஆக வழக்கு பதிவு செய்தார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** ஆகும்.

3. பிறகு புலன் விசாரணை அதிகாரி புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 01.07.2023–ம் தேதி மதியம் 2 மணிக்கு சம்பவ இடம்

சூரப்பள்ளி ராம்தாஸ் நகர் தண்ணீர் டெங் அருகே சென்று சாட்சிகள் சின்னப்பையன் மற்றும் நாகராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ.3** மற்றும் **அ.சா.ஆ.4** ஆகும்.

4. பின்பு சாட்சிகள் துரைசாமி, பழனியப்பன். மணிகண்டன், ரேவதி, சின்னப்பையன், நாகராஜ், ராஜ்குமார், தினேஷ்குமார், மருத்துவர் தமிழ்செல்வி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். சாட்சிகள் விசாரணை அடிப்படையில் எதிரி பாபு என்பவர் நீக்கல் அறிக்கை வாயிலாக நீக்கம் செய்யப்பட்டார். எதிரி நீக்கல் அறிக்கை **ஆ.தா.ச.5** ஆகும். இவ்வழக்கில் காயமடைந்த துரைசாமி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தமிழ்செல்வி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றார். விபத்து பதிவேடு **அ.சா.ஆ.6** ஆகும். கடந்த 01.07.2023–ஆம் சூரப்பள்ளி தண்ணீர் டெங் அருகே சாட்சிகள் முன்னிலையில் அடக்கமான ஒழுங்கற்ற நிலையில் உள்ள கருங்கல் ஒன்று கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக கைப்பற்றப்பட்டு படிவம் 95 வாயிலாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. கைப்பற்றுதல் மகஜர் **அ.தா.ச.7** ஆகும். படிவம் 95 **அ.தா.ச.8** ஆகும்.

5. இவ்வழக்கின் எதிரி ஆனந்தன் கடந்த 01.07.2023– ம் தேதி ஆகியோர் கைது செய்யப்பட்டு தக்க வழிக்காவல் மூலமாக நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர். மற்றஎதிரிகள் கடந்த 20.07.2023–ம் தேதி மாண்புமிகு மாவட்ட நீதிமன்றதில் முன்ஜாமீன் பெற்றதால் கைது செய்ய மார்கமில்லை.

6. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 28.08.2023–ம் தேதி **நிநி.கு.எண்.146/2023 u/Sec. 294(பி), 323, 324, 506(1) IPC** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.**

7. நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்குக்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. புலன் விசாரணை ஒரு தலைபட்சமானது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**